1974 சனவரி 22]

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்களுக்கு இதற்கு நன்றி செலுத்துகிற நேரத்தில் மொத்தம் முன்பு 8 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டதே. மேலும் தொகை ஒதுக்கப்படுமா? அடிப் படையான வேலைகள் எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, விளுவில் குறிப்பிடப்பட்டுள்ள பால வேலைக்குத் தோராயமாக 8.25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப் பீட்டின்படி 1973 ஜூலை மாதம் கூடிய நிதிநிலைக்குழு இவ்வேலைக்கு ஒப்புதல் அளித்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டின்படி இவ் வேலைக்கு ரூபாய் 4 இலட்சம் போதுமானது என்ற கருத்துக்கு ஏற்ப இப்பால வேலையை 4 இலட்ச ரூபாய் செலவில் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலவெள்ளூர்-அம்பலத்தாடி இணைப்புச்சாலை

* 81 விளு.—**திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடை யளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர் வெள்ளக்கரை சாலையில் இருந்து அம்ப லத்தாடிக்குச் செல்லும் இணைப்புச்சாலை எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர்- வெள்ளக்கரை சாலையிலிருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச் சாலை மராமத்து வேலை தற்போது ஊரக வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Scheme for Rural Employment) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் வேலை 31—12—1973-க்குள் பூர்த்தி செய்யப்படும்.

சின்னக்கண்ணனூர் சாலை

* 82 விளு.—**திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னக்கண்ணனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?